**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12–ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஐ.ஏ.எண்.3/2024**

**இன்**

**அ.வ.எண்.42/2015**

1. பர்வதவர்த்தினி
2. S. குமார்
3. K. தில்லையம்மாள்
4. தவசிகா(மைனர்)
5. கார்த்திகா(மைனர்)

(4, 5 வாதிகள் மைனராக இருப்பதால் அவருடைய
தாயாரும், கார்டியனுமான 3 ம்வாதி தில்லையம்மாள் மூலம்)

6. S. முனியசாமி
7. G. காளீஸ்வரி
8. T. மேனகா (எ) காளீஸ்வரி
9. T. கௌரி(மைனர்)
10. T. விக்னேஷ்

(9, 10 வாதகிள் மைனராக இருப்பதால் அவருடைய
தாயாரும், கார்டியனுமான 8 ம்வாதி
மேனகா (எ) காளீஸ்வரி மூலம்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ராஜவேல்
2. சௌந்திரவள்ளி
3. கண்ணன்
4. அழகம்மாள்
5. ஹரிஹரசுதன்
6. தர்மமுனீஸ்வரி
7. கணேசமூர்த்தி
8. குணசேகரன்
9. காயத்திரி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 04.11.2024–ம் தேதியில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.R.தாமோதர் ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சீனிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுப்புராஜ் அவர்கள் ஆஜராகியும், 4, 5, 6 எதிர்மனுதாரர்கள்/4, 5, 6 பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக உள்ளநிலையில், இருதரப்பு வாதங்களைக் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தில் விசாரணை இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்டளை 18 விதி 17 சிபிசி–ன் கீழ் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வா.சா.1 யை ரீ–கால்(Recall) செய்து உத்தரவிடமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) மனுவின் சுருக்கம்</u> :–

i) மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி எனவும், மற்ற வாதிகளுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்வதாகவும், அசல் வழக்கினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதகாவும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதார் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் வழக்கின் முக்கியமான ஆவணங்கள் வழக்கறிஞரின் அலுவலக இட மாற்றத்தால் மற்ற வழக்கு கோப்புகளுடன் கலந்துவிட்டதால் தாக்கல் செய்யமுடியாமல் போய்விட்டதாகவும், அதனால் ஷை ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக வா.சா.1 யை மீண்டும் அழைக்க(recall) செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

மனுதாரர்/வாதி இந்த வழக்கில் வழக்குச் சொத்து தங்களுக்கு உரிமையானது என விளம்புகை மற்றும் எதிர்மனுரார்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக Mandatory Injunction & Permanent Injunction நிவாரணம் கேட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த நிவாரணங்களுக்கு தொடர்புள்ளதாகச் சொல்லி இவ்வழக்கு விசாரணையில் இதுவரை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.25 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளதாகவும்,

தற்போது இந்த மனுவின்மூலம் புதிதாக 3 போலிஸ்புகார் மனு நகல்களை தாக்கல் செய்து, அவைகளையும் நீதிமன்றம் ஏற்று குறியீடு செய்ய கோருவது வாதியின் நல்ல நோக்கத்துடன் இல்லை எனவும், இந்த 3 புகார் மனுக்களும் 08.05.2017 ம் தேதி, ஒரே தேதியிட்டு, மண்டபம் காவல் ஆய்வாளர், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டதாக கூறியுள்ளதாகவும்,

அந்த புகார் மனுக்களில் தாவா சொத்தாக, பூமியில் இல்லாத ஒரு 0.09 செண்ட் நிலத்தில், இந்த 1ம் பிரதிவாதி ராஜவேலு தூண்டிவிட்டு, பிரதிவாதிகளான இறந்த கண்ணன் மற்றும் அவரது குடும்பத்தார் 2014ம் ஆண்டில் தாவா சொத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, 1ம் வாதி பர்வதவர்த்தினிக்கு கொலை மிரட்டல் செய்ததாகவும், அதன் தொடர்ச்சியாக மனுதாரும், இந்த அசல்வழக்கு 42/2015 வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளதாகவும்,

மேலும் அந்த மனுக்களில் இம்மனுவில், 02.05.2017ல் இந்த 2ம் பிரதிவாதி சவுந்தரவல்லியும், மற்றும் 5 பேர்களும் மேலே கூறப்பட்ட 9 செண்ட் நிலத்தில் தகர ஷீட்டுக்களை வேலியாக வைத்து, கூரை வீடு கட்டியிருப்பதாகவும் கூறி, அப்போது இரு தரப்புக்கும் கைகலப்பு நடந்து, அந்த சம்பவம் தொடர்பாக மண்டபம் காவல் ஆய்வாளருக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கும் 08.05.2017ல், சம்பவத்திற்குப்பின் 6 நாட்கள் கழித்து, அதே புகார் மனுக்களை அனுப்பியதாகவும் கூறியுள்ளதாகவும், புகார் தேதியிலிருந்து 8 1/4 வருடம் கழித்து, அந்த புகாரின் நகல்கள் என்று நீதிமன்றத்தில் இந்த 3 ஆவணங்களையும் தாக்கல் செய்து குறியிடக்கோருவது மனுதாரின் கெட்ட நோக்கத்தின் அடிப்படையே அன்றி வேறு ஒன்றும் இல்லை எனவும்,

இந்த மனுதாரர் அந்த 3 மனுக்களில் கண்ட ஒரே சம்பவத்திற்கு தொடர்பானவர் என்று மனுவில் கூறவில்லை எனவும், அந்த புகார் மனுக்களில் மனுதாரரின் சகோதரி 1ம் வாதி பர்வதவர்தினி மட்டுமே இருந்துள்ளதாகவும், பிறகு சம்பவ இடத்திலிருந்து ஓடிவந்து இந்த மனுதாரரிடம் சம்பவம் பற்றி சொன்னதாகவும், அன்று மாலை காவல் ஆய்வாளிடம் புகார் கொடுத்ததாகவும் மனுவில் காணப்படுகிறதாகவும், ஆனால் அப்போது ஆய்வாளிடம் கொடுத்த மனுவின் நகல் எதையும், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை எனவும்,

அதன்பின்பு அந்த புகார் மனுவில் 2ம் பிரதிவாதி, சவுந்தரவல்லியை இந்த 1ம் பிரதிவாதி ராஜவேலு 2014ம் ஆண்டில் தூண்டிவிட்டதாகவும், அதன்பின் 3 ஆண்டுகள் கடந்து, 02.05.2017ம் தேதி சம்பவம் நடந்ததாகவும் கூறியிருப்பது எல்லை கடந்த கற்பனையான பொய் எனவும், உண்மையில் சம்பவம் நடந்திருந்ததிலிருந்து 6 நாட்கள் கழித்து 08.05.2017ம் தேதி காவல் ஆய்வாளருக்கும், காவல் கண்காணிப்பாளருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் இந்த புகாரை அனுப்ப இல்லை எனவும்,

குற்றப் புகார் மனுக்கள் 3ம் அரசு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்குமேயானால், மனுக்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமலிருந்தால், கோர்ட் விவகாரங்களில் அத்துபடியாக உள்ள இந்த மனுதார்/ வாதி உடனே (கு.வி.மு.ச பிரிவு 156(3) படியோ, அது பலன் அளிக்காவிட்டால், கு.வி.மு.ச பிரிவு 200ன் கீழ் நீதிமன்றத்தில் தனிப்புகார் தாக்கல் செய்தோ நிவாரணம் பெற்றிருக்க முடியும். ஆனால் மனுதாரர் இந்த புகார் மனுக்களை செயற்கையாக உருவாக்கி, இடைச்செருகலாக வழக்கில் உட்படுத்த முயற்சிக்கிறார் எனவும்,

இந்த எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 90 வயதானவர் எனவும், நோயின்பிடியில் தவிக்கும் அவர், இந்த வழக்கில் தனது தரப்பு வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் ஆஜராகி கூற முடியாமல் தாமதப்படுத்தும் நோக்கத்தில் மனுதாரர் / வாதி செய்யும் உபாயமே, இந்த மனு எனவும், வழக்கை நீட்டித்து கொண்டு போவதற்கு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை இந்த 1ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 ம்பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

மனுதாரர் மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை, மனுதார்/வாதி சாட்சி விசாரணையின் போது வழக்கிற்கான சில முக்கிய ஆவணங்கள் வழக்கறிஞர் அலுவலக இட மாற்றத்தால் மற்ற வழக்கு கோப்புகளுடன் கலந்துவிட்டதால் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டதாக கூறியுள்ள காரணம் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட காரணமாக உள்ளதாகவும், ஏனெனில் இந்த மனுதாரர்களால் கடந்த 06.10.2020–ல் IA.No:49/2020 மனுவிலும் இதே காரணத்தை கூறிதான் அந்த மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதன் பிறகு 4 வருடங்கள் கடந்து தான் வாதியால் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 1 முதல் வா.சா.ஆ.25 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள்/வாதிகள் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் ஒவ்வொரு மனுவாக தாக்கல் செய்து அசல் வழக்கை காலதாமதம் செய்து வருகிறார்கள் எனவும், மனுதாரர்கள் கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை கடமைக்கு கூறும் காரணம் போல் உள்ளதாகவும்,

மேலும் மனுதாரர்/வாதிகளால் தாக்கல் செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதி பாவதவர்த்தினி அவர்களால் அனுப்பப்பட்ட ஆவணங்கள் எனவும், இந்த ஆவணங்கள் சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தில் ஷை ஆவணங்களின் நம்பக தன்மையை நிரூபிக்க 1ம் வாதியான பர்வதவர்த்தினியை விசாரணை செய்தால் தான் தெரியவரும் எனவும், அவர்மூலமாக ஷை ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் இந்த ஆவணங்களுக்கு சம்பந்தமில்லாத 4ம் வாதியான குமார் அவர்களை வைத்து ஷை ஆவணங்கள் தாக்கல் செய்தால் வீண்குழப்பம் தான் ஏற்படும் எனவும், மேலும் ஷை ஆவணங்களை அனுப்பிய 1ம் வாதியை சாட்சியாக நீதிமன்றத்தில் கொண்டு வந்தால் தான் ஷை ஆவணங்களின்

உண்மை சங்கதிகள் தெரியவரும் எனவும், அவரது சாட்சியத்தை தவிர்ப்பதன் மூலம் நீதிமன்றத்தில் உண்மை சங்கதிகளை மறைத்து வருகின்றதாகவும், ஒருவேளை 1ம் வாதியின் மூலமாக ஷை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால் அது இந்த மனுதாரர்கள் / வாதிகளுக்கு எதிராக அமைந்து விடும் என்பதனால் தான் 1ம் வாதியை சாட்சியாக நீதிமன்றத்திற்கு கொண்டு வராமல் இந்த மனுதாரர் மூலம் 1ம் வாதி அனுப்பிய அவணங்களை தாக்கல் செய்ய முயற்சி செய்வதாகவும், இந்த ஆவணங்களை இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டால் அது இந்த பிரதிவாதிகளுக்கு இந்த ஆவணத்தின் உண்மைதன்மையை நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியாத அவலநிலை ஏற்படும். எனவே எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>பிரச்சினை</u> :–**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5) **<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) அசல் வழக்கானது மனுதாரர்/வாதி வகையறாவால் எதிர்மனுதாராகள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கு விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு 30.08.2024ம் தேதியில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன்பின்பு மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக 03.09.2024 வரை வாய்தா வழங்கப்பட்டுள்ளது. அதுவரை மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் கூடுதல் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

அதன்பின்பு 01.10.2024 ம் தேதி மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1யை ரீகால் செய்யக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மனு அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள

காரணமானது, ஷை ஆவணங்கள் வழக்கறிஞர் அலுவலகம் இடமாற்றத்தால் மற்ற வழக்கு கோப்புகளுடன் கலந்துவிட்டதால் தாக்கல் செய்யமுடியாமல் போய்விட்டதாகவும், தற்போதுதான் அந்த ஆவணங்கள் கிடைத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி ஷை ஆவணங்களாக பார்க்கையில், 08.05.2017 ம் தேதியில் 1ம்வாதி மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மண்டபம் காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய புகார்மனு ஆகும். ஷை புகார் மனுக்கள் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய சொத்தின் உரிமை குறித்து தீர்மானம் செய்வதற்கு முழு ஆதார ஆவணம் இல்லை.

7) மேலும் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி வகையறா சாட்சியம் முழுவதும் முடிக்கப்படவில்லை. ஷை மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காதான் நிலுவையில் உள்ளது. எனவே ஷை ஆவணங்களை மற்ற சாட்சிகளின் மூலம் குறியீடு செய்யலாம். வா.சா.1யை ரீகால் செய்துதான் அந்த ஆவணங்களை குறியீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை. 08.05.2017ம் தேதியிட்ட புகார் மனுக்களை 1ம்வாதி அனுப்பியுள்ளார். 1ம்வாதியை கூடுதல் சாட்சியாக விசாரித்து அவர்மூலம் ஷை குறியீடு செய்வதற்கு எந்த தடையும் இல்லை. அசல் வழக்கானது 05.08.2015ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுமூலம் குறியீடு செய்யப்படவேண்டியதாக சொல்லப்படும் ஆவணங்களான போலீஸ் புகார் மனுக்காளனது 08.05.2017ம் தேதி தபால் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மண்டபம் காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே ஷை புகார் மனுக்கள் வழக்கு தாக்கல் செய்த பின்புதான்(after suit) அனுப்பப்பட்டுள்ளது. அதனால் அந்த ஆவணங்களினால் இந்த வழக்கில் வழக்குமூலம் எதுவும் ஏற்படவில்லை. எனவே அசல் வழக்கினை காலங்கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் 2015ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தபின்பு 2017ம் வருடம் அனுப்பிய புகார் மனுக்களை குறியீடு செய்ய மனுதாரர்/வாதி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால் இந்த மனுவை அனுமதித்தால் நீதிமன்றம் காலம் வீணாகும்.

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் **T. Arivandandam vs T. V. Satyapal & Another 1977 (4) SCC 467** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

**the court directed the Trial Court to dispose of it forthwith after giving an immediate hearing of the parties concerned and to take deterrent action if it is satisfied that the litigation was inspired by vexatious motives and is altogether groundless, reminding itself of sec. 35A of the C.P.C.**

எனவே இந்த மனுவின் மனுதாரர்/வாதி வகையறாவிற்கு அசல் வழக்கில் 08.05.2017 ம் தேதியிட்டு அனுப்பப்பட்ட புகார் மனுக்களை அனுப்பிய 1ம்வாதியை சாட்சியாக விசாரித்து குறியீடு செய்வதற்கு தாராளமாக வாய்ப்பு உள்ளது. இதற்குமாறாக 30.08.2024ம்தேதி வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பின்பு 30.09.2024ம் தேதி வரை கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளநிலையில், ஷை 08.05.2017ம் தேதியிட்ட புகார் மனுக்களை மனுதாரர்/வாதி வகையறா தரப்பில் ஆவணமாக குறியீடு செய்வதற்கு வா.சா.1யை ரீகால் செய்ய இந்த மனுவில் கோரியிருப்பது vexatious ஆக அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தாக்கல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. அதனால் மேற்படி முன்வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்ற சொல்லியுள்ள தீர்ப்பின்படி மனுதாரர்/வாதி ரூ.500/−த்தை 1ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும், ரூ.500/த்தை 2, 3, 7, 8, 9 எதிர்மனுதார்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகளுக்கும் உரிமையில் நடைமுறைச்சட்டம் பிரிவு 35(A)ன்படி கட்டாய செலவுத்தொகையாக (compensatory costs) வரும் 18.11.2024ம் தேதியோ அல்லது அதற்கு முன்போ செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் அதன்பேரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.11.12 18:56:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :–** **இல்லை**

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> :–** **இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u> :–** **இல்லை**

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.11.12 18:56:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 3/2024
இன்
அ.வ.எண்.42/2015
நேரிய/வரைவு உத்தரவு
நாள்: 12.11.2024